மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

ஐ. தே. கவை புனரமைக்க நடவடிக்கை

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 86 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 24 இதழ் 86
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 7-5-1994

புதிய செயலர் காமினி தகவல்

(தொழும்பு)

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி முற்று முழுதாக புனரமைப்புச் செய்யப்படும் கட்சி சிறிலிருந்து பிரிந்து சென்ற மைத்திரி ஜனாதிபதி பிரேமதாஸாவின் ஆதரவாளர்களை கட்சியில் சேர்த்துக்கொள்ளப் ஐ.தே.க. தலைமை செயலாளரான ஸ்ரீசேனாவிடம் (4-ம் பக்கம் பார்க்க)

நாடாளுமன்றில் 10 மணித்தியாலம் காரசாரமான விவாதம்

(தொழும்பு)

ஆளும் ஐ.தே.க.வினர் எதிரான எதிர்க்கட்சியின் கொண்டு வந்த நம்பிக்கை வில்லாப் பிரேரணை மீது மிகக் காரசாரமான விவாதங்கள் சமரி பத்து மணித்தியாலம் வரை நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் நடைபெற்றதாக பி. பி. ஸி. தெரிவித்தது. (2-ம் பக்கம் பார்க்க)

நவீன ஆயுதமின்றி ராணுவம் புலிகளை எதிர்கொள்ள முடியாது

படை அதிகாரிகள் மத்தியில் அச்சம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் பலம் நாளுக்குநாள் அதிகரித்து வருவதால் போதிய ஆட்பலமும் நவீனரக ஆயுதங்களுமின்றி புலிகளை எதிர்கொள்ள முடியாது என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

"விடுதலைப்புலிகள் தற்போது மிகவும் பலம் வாய்ந்த நிலையில் இருக்கின்றார்கள். அவர்களை எதிர்த்துப் போராடுவதாகில் இராணுவத்துக்கு மிக நவீன இராணுவசாதனங்கள் தேவை" என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த காலங்களில் விடுதலைப்புலிகள் இராணுவத்தினரிடமிருந்து பெருந்தொகையான ஆயுதங்களை கைப்பற்றியதன் மூலம் அவர்கள் தற்போது மிகவும் பலம் வாய்ந்த நிலையில் இருக்கின்றார்கள்.

விடுதலைப்புலிகளை தோற்கடிக்கவேண்டுமாகில் இராணுவத்துக்கு புதிய நவீன ரக ஆயுதங்களும், ஆட்பலமும் கட்டாயம் இருக்கவேண்டும் என்று இராணுவ வட்டாரங்கள் மேலும் தெரிவித்ததாக வெரிதாஸ் தெரிவித்தது. (இ-வி-பி)

மட்டக்களப்பு 4 தமிழர் சுட்

(மட்டுநகர்)

கடந்தவாரம் மட்டு மாவட்டத்தில் இருவேறு பகுதிகளில் கைதானவர்கள் நான்கு தமிழர்கள் கடுங்கொலைப்பட்டனர்.

கடந்த 29 ம் திகதி வாகரை

கிளாலி - பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்துக்கு நடைபெறுமென விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

கடலுக் ரயில் சுரா

(கல்லடி)

பிரிட்டனுக்கும் - பிரான்சுக்குமிடையில் கடலுக்கடியில்

வறுமையிலிருந்து நாட்டு மக்களை விடுவிக்கவேண்டும்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள எமது நாட்டு மக்களை இந்த சாபத்திலிருந்து விடுவிப்பது எமது முக்கிய கடமையும் பொறுப்புமாகும். எதிர்க்கட்சித் தலைவியும் - சிறிமா

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க விடுத்துள்ள செய்தி ஒன்றில் இவ்வாறு தெரிவித்தார். (4-ம் பக்கம் பார்க்க)

அம்பாறையில் பொலிஸ், இன்ஸ்பெக்டர் பலி!

(அம்பாறை)

அம்பாறையில் வாகனமொன்றுக்கு சென்றுகொண்டிருந்த சிறிலங்கா பொலிசார் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலில் சப் இன்ஸ்பெக்டர் ஒருவரும் பொலிஸ் ஒருவரும் கொல்லப்பட்டனர். இதேவேளை மட்டுநகரில் (4ம் பக்கம் பார்க்க)

35 லட்சம் மாணவர்கள் உணவுமுத்திரை பெறுவர்

(கொழும்பு)

மேலும் 17 லட்சம் பாடசாலை மாணவர்களுக்கு உணவு முத்திரை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. தற்சமயம் 18 லட்சம் மாணவர்கள் உணவுமுத்திரையைப் பெற்று வருகின்றனர்.

மதிய போசனத்துக்கான உணவு முத்திரைக்கு விண்ணப்பித்த சகலருக்கும் இந்த உதவி வழங்கப்படவுள்ளது.

உணவு முத்திரைக்கென மாணவர்கள் தெரிவு செய்யப்படும்போது அவர்களது குடும்ப வருமான எல்லைக்கு எடுக்கப்படமாட்டாது என (4-ம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதி மாளிகையின்முன் சத்தியாக்கிரகம் இ ரூ. 10,000பிணையில்

(கொழும்பு)

தொழிற் உரிமைகள் பாதிக்கப்படுவதை எதிர்த்து தேசியமான கூட்டு முதலாளிகளுக்கு திகதி ஜனாதிபதி மாளிகைக்கு முன் சத்தியாக்கிரகம் இருந்த போது கைது செய்யப்பட்ட ஆசிரியர் சங்கத்தலைவர் (45-வயது 10 ஆயிரம் ரூபா சரீரப் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் வழங்க (4-ம் பக்கம் பார்க்க)

● மனித உரிமை விடயத்தில்

ஐ. நா. வின் விதப்புரைகளை கடைப்பிடிக்க அறிவுறுத்து

(ஸ்ரஸ்பேர்க்)

காணாமற்போனோர் தொடர்பாக ஐக்கிய நடவடிக்கைக் குழுவினதும் சர்வதேச மன்னிப்பு சபையினதும் விதப்புரைகளை நாடுகள் நடைமுறைப்படுத்துவது ஐரோப்பிய நாடாளுமன்றம் இலங்கை அரசைக் கேட்டுள்ளது.

கண்ணாடியில் ஸ்ரஸ்பேர்க்கில் கூடிய இக்குழுவினர் நிலைபற்றும் மற்றும் ஆட்கடத்தலையுமன்றியும் தொடர்பு சாதனங்களை செயலாற்ற விடவேண்டும்.

மனித உரிமை தொடர்பான சட்டதிட்டங்களை கொண்டுவர வேண்டியதோடு மனித உரிமையை மீறியோரை சட்டத்தின் முன் நிறுத்தப்பட (4 ம் பக்கம் பார்க்க)

மறுமலர்ச்சி தி. மு. க. வை. கோ. ஆரம்பித்தார்

(சென்னை)

திரு. வை. கோபாலசாமி "மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்" என்னும் புதிய அரசியல் கட்சியை நேற்று ஆரம்பித்தார்.

இக்கட்சியின் தலைவராக திரு. எஸ். கணேசனும், பொதுச்செயலாளராக திரு. வை. கோபாலசாமியும், பொருளாளராக திரு. என். கண்ணப்பனும் தெரிவு செய்யப்பட்டார்.

இக்கட்சியின் முதலாவது கட்டமும் நேற்று சென்னை (4-ம் பக்கம் பார்க்க)

கலிவிளம்பரம்

அதிர்ஷ்டம் அழைக்கிறது

உங்களுக்கு இராஜயோகமுண்டா? எப்போ பலன்செய்யும் விரைவே ஆராய்ச்சிகளுடன் பதில் தரப்படும். இன்று 2 மணி வரை தொடர்பு ஸ்ரீமான் விநாயகர் சோதிட நிலையம். 158, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (கி 1007)

பிரச்னைகள் தீர

எதிர்கால தீராத பிரச்னைகளும் தீர யந்திரங்கள் வழங்கப்படும். விவசாய வசிய யந்திரங்களும் பெறலாம். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ராகுகாலத்துடன் நேரில் வரவும். ஸ்ரீ மான் விநாயகர் சோதிட நிலையம், 158, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (கி-1005)

ரகு புகைப்பட கருவி திருத்தகம்

சகல விதமான புகைப்படக்கெமராக்களும், உபகரணங்களும், பிளாஷ்கன் ரேஞ்சைன்டர், லைனுலர்ஸ், டெலி, சூம், வைட், லென்ஸ் வகைகளும் ஏனைய வைகளும் T.V. கமரா உபபட பூரணமாகத் திருத்தி கொடுக்கப்படும். ரகு புகைப்படக்கருவி திருத்தகம் (ரகு பேக்கேஜ் ஸ்ரோர்) 801, ஸ்ரேஷன் வீதி (மேலைமாடி) யாழ்ப்பாணம். (கி-1001)

திருட வந்தவர்கள் வயோதிபர் மீது தாக்கு

(நெல்லியடி)

வீட்டுக் திருடுவதற்குப் புகுந்த இரு திருடர்கள், அவ்வீட்டிலுள்ள முதியவர் கூக்குரலிடவே அவரைப் பலமாகத் தாக்கிவிட்டு வேலியாரம் பாய்ந்து தப்பி ஓடிவிட்டார்கள்.

இச்சம்பவம் புலோலி கிழக்கை நடுவில் இடம் பெற்றது.

திருடர்களின் தாக்குதலுக்கு இலக்கான வரணியம் (வயது 75) என்னும் முதியவர் பருத்தித்துறை தமிழீழ வானொலி நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (160)

பாலபண்டித பரீட்சை ஜூன் மாதம் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. (உ/த) முன்னோடிப் பரீட்சையும் பண்டித, பாலபண்டித, பிரவேச பண்டித பரீட்சைகளும் யாழ்ப்பாணம் ஆங்கில திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் வழக்கமாக இவ்வருடமும் ஜூன் மாதத்தில் நடத்தமுன் வந்துள்ளது

க. பொ. த. (உ/த) முன்னோடிப் பரீட்சையில் இந்து நாகரீகம், தமிழ் ஆகியன இடம் பெறும் என்றும் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 11ம் திகதி ஆகும் என பரீட்சை ஜூன் 3, 4 ஆம் திகதிகளில் முறையே இந்து நாகரீகமும், தமிழும் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பண்டித, பாலபண்டித, பிரவேச பண்டிதப் பரீட்சைகள் ஜூன் மாதம் 15, 16, 17 ஆம் திகதிகளில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி ஆசிரியர்களுக்கு சேவைக்கால பயிற்சி

(உடுவில்)

யாழ்ப்பாணக் கோட்டத்தைச் சேர்ந்த முதன்மை ஆசிரியர்கள் பலர் மே மாதம் 8 ம் திகதி முதல் ஜூன் மாதம் ஆறும் திகதிவரை கிளிநொச்சி கல்வி ஆசிரியர்களுக்கு சேவைக்காலப் பயிற்சிகளை வழங்க முன்வந்துள்ளனர்.

இம்முதன்மை ஆசிரியர்கள் ஒவ்வொரு பாடரீதியாக ஒவ்வொரு மாகாணக் கிளிநொச்சிக்கு சென்று தமது கடமைகளை மேற்கொள்ள இருக்கின்றனர்.

இப்பணிகளுக்காக முதலாவது தொகுதி முதன்மை ஆசிரியர் குழுவினர் இன்று ஏழாம் திகதி கிளிநொச்சிக்கு புறப்பட உள்ளனர். (109)

வேளாண்மன்னர்

(யாழ்ப்பாணம்)

வேளாண்மையைப் போஷிப்பதற்கு பக்கூடாகவும் தெற்றியீடிய விவசாயிகள் "வேளாண்மன்னர்" என்ற பட்டமளிக்கப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளனர்.

தமிழீழ பொருளாதார மேம்பாட்டு நிறுவனம் வடதமிழீழத்தில் மாவட்ட ரீதியாக நடாத்திய வேளாண்மையைப் போஷிப்பதிலேயே 1993/94-ம் ஆண்டுக்கான தெற்றியீட்டியவர்களே கௌரவிக்கப்படவுள்ளனர். -162

வெப்பம் அதிகரிப்பு

(கொழும்பு)

திருகோணமலை, அம்பாறை, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் தற்போது எடுக்கும் வெப்பநிலை நிலவுவதாக அவதான நிலையம் அறிவித்தள்ளது.

இவ்விடங்களில் தற்போது வெப்பநிலை 35 பாகையாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இடங்களில் வெப்ப நோய்கள் ஏற்படும் அறிகுறி தென்படுவதாகவும் கூறப்படுகிறது. -வி

செய்திச்சிதறல்

சமய தீட்சை

(கொழும்பு துறை)

பளை இத்தாவில் அருள்மிகு ஸ்ரீ வீரவர் கோவிலில் விநாயகம் பிரார்த்தனை குழுவினர் சமய தீக்ஷையினை நடாத்தினார்கள்.

சரஸ்வதி இந்துமன்றம் சார்பில் செயலாளர் திரு. க. விசுவநாதனுக்கு நித்தியகருமநிதி நாளை இவைகளாக வழங்கினர். — 154

கலைஞர் விபரம் சேகரிப்பு

(கொழும்புத்துறை)

சங்கானை வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஒருபத்தொன்பது கிராம அலுவலர் பிரிவுகளிலும் கிராம அலுவலர்களினூடாக பத்தாயம், நாடகம், சங்கீதம், கிராமிய, பத்திரிகை போன்ற துறைகளில் ஈடுபட்டுள்ள சகல கலைஞர்களின் விபரங்கள் யாவும் திரட்டப்பட்டு வருகின்றன. (154)

உவர்நீர் தடுப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

முல்லை மாவட்டத்தில் செம்மலைப் பகுதியில் கடல்நீர் உள்ளிருந்து சிரமத்திற்குள் உவர்மண் வராது தடுப்பதற்கு, உவர் நீர் தடுப்பு அணைகள் அமைக்கப்படுகின்றது

தமிழீழ பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்தி குழுப்பகுதியினரால் மேற்கொள்ளப்படும் இத்திட்டத்தின் மூலம் ஏறத்தாழ இரண்டு லட்ச நீளத்திற்கு தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு தடுப்பு நடவடிக்கைமேற்கொள்ளப்படுவதாலே பருத்தியில் பயிரிடுதல் நடுவேயும் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

வணக்கமாத வழிபாடு

(அல்லாலை)

புனித மரியாள் வைகறை மாத வணக்கமாத வழிபாடு கடந்த வியாழக்கிழமை கிறிஸ்துவ ஆலயங்களில் கடந்த 1ம் திகதி முதல் ஆரம்பமாகி உள்ளது. பாகஷயூர் புனித அந்தோனியார் கோவில் உட்புறம் புனித மரியாள் சொரூபம் வைத்தப்பின் வழிபாடுகள் நடைபெறுகின்றன கடந்த 1ம் திகதி திங்கள்கிழமை யாழ். புனிதவீரத நியம மண்டபத்தில் புனித மரியாள் சொரூபம் வைக்கப்பட்டு புனித ஆலயங்களை மாதா பக்தர்கள் அருள்திரு ஜே. நீக்கிலஸ் அடிகளின் தலைமையில் வழிபாடுகள் நடைபெற்றன. - 59

கல்விகற்க வெளிச்சவசதி

(கொழும்புத்துறை)

நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தினர் தமதுபகுதிக்கு உயர்தட்ட மாணவர்கள் சனசமூக நிலையத்தில் வந்து இரவில் இலவச கல்வி கற்கத்தக்கவாறு பெற்றோமாக்ஸ் வசதியினைச் செய்து கொடுத்துள்ளனர். (154)

புதிய நிவாரணக் கிணறு

(பண்டத்தரிப்பு)

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆனைக்கோட்டை "திருக்கை சீமை" கிராமவர் பூங்காவுக்கு சமீபமாகவுள்ள கட்டிடம் ஒன்றில் இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரணம் வழங்கும் புதிய கிணறு ஒன்றை அண்மையில் திறந்துள்ளது. (72)

இரத்ததானம் செய்ய ஏற்பாடு

(நல்லூர்)

செஞ்சிலுவைச் சங்கத்தை உருவாக்கிய ஜீன் ஹென்றி டுனாண்ட் தினத்தை முன்னிட்டு நாளை 8-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரத்ததானம் செய்ய விருப்பம் தொண்டர்கள், உறுப்பினர்கள் தங்கள் பிரிவு மூலமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, பகுத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஆகியவற்றில் இரத்ததானம் செய்யுமாறு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளைச் செயலாளர் அறிவித்துள்ளார். -163

கடலுக்கடியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று சமிபிரதாய பூர்வமாக திறந்துவைத்தார். இந்த ரயில் பாதை மூலம் மலைக் இனமேல் பிரிட்டனிலிருந்து பிரான்ஸுக்கு 35 நிமிடங்களில் செல்ல முடியும். வி-பி

நடுவளுமன்ற

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுபற்றி பி.பி.ஸி மேலும் தெரிவிக்கையில், நமிபியாவை விலாப் பிரேரணை மீது விவாதம் நடைபெறும்போது சபையில் ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருந்தது.

பல சமயங்களில் இருபகுதியினரும் ஒருவரை ஒருவர் தனிப்பட்டமுறையில் தரக்குறைவான வார்த்தைகளால் தாக்கி நேரடியாகவே சண்டையிட்டனர்.

இதேநேரத்தில் பல தமிழ் எம். பிக்கள் அரசாங்கம் - எதிர்க்கட்சியும் தமிழ்மக்களின்மீது ஜனநாயக விரோதப்போக்கை கையாடி வருகின்றார்கள் என்று இருதரப்பாரையும் மிகவும் காரசாரமாக தாக்கிப் பேசினார்கள் என்று தெரிவித்தது. வி

அறிவித்தல்

மரணவிலாசம் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்ப்பாணத்தில் வசிப்பவருமான (சீனியர் வீடியோ வளர்த்த) சிறினிவாசன் (குணம்) ஆகிய நான்

குணநாதசிவம் என்று பெயர் மாற்றம் செய்துள்ளேன். வீரசைவ வண்டாரகுலத்தை சேர்ந்த நான் வீரசைவமுறைப்படி இவ்விங்கதாரணம் செய்ய கவிவேன். அத்துடன் சைவசமய இரண்டாந் தீக்ஷையும் கேட்டுள்ளேன். என்பதை அறியத்தருகிறேன். முக்கிய விடயம்: மரியாதை கூப்பிடக்கூடிய பெயராக சிவம் என்று அழைக்கவும் (வைத்திய தொழிலும் பூசாரியும் [D. A. M, B. H.[S D. A. M S இலங்கை, M. B. B. S - கல்கத்தா, சகலவிதமான விஷயங்களுக்கும் மருத்துவமுறையிலும் வைத்திய முறையிலும் விபரம் செய்யப்படும்.

மற்றும் மனநோய் வைத்தியம். மனோதத்துவ வைத்தியம். முறிவு நோய் வைத்தியம்

விடுப்சாத்தி, கிரகசாந்தி, பிணிதோஷ நிவர்த்திகளும் செய்யப்படும்

இடம்பெயர்ந்திருக்கும் முகவரி

S. குணநாதசிவம்

"சிவஸ்தான்" மீசாலை வடக்கு,

மீசாலை

(கி-சி1010)

பாலர் பாடசாலை

விபரங்கள் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் தனியார் மற்றும் பொது நிறுவனங்களால் நடாத்தப் பக்கிறவரும் பாலர் பாடசாலை விபரங்களை நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் திணைக்களத்திற்கீழ் யாழ். மாநகர சபை சுகாதாரப் பிரிவினர் சேகரிக்கப்பட்டு வருகிறது. -162

நன்றி நவிலல்

B. மரியாம்பிள்ளை செபமாலை

04-05-94 ம் திகதி காலமான எமது தந்தையாகிய வஸ்தியாம்பிள்ளை மரியாம்பிள்ளை செபமாலையின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட அனைவருக்கும் மற்றும் சகல விதமான உதவிகளைப் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றி கூறுபவர்கள்:

திருமதி M. R. அமிர்தவாசகம்

குடும்பத்தினர்

13/3, மத்தியூஸ் வீதி,

யாழ்ப்பாணம்.

(எ 4068)

யாழ்ப்பாணம்

மனிதனுக்கு

பெக்கோரா களின் செயற்களைப் பொருட்படுத்தாமல் செருக்கினால் செய்யப்படும் காரியம் நமக்குக் கேடு விளைவிக்குமா? என்பதைக் குறித்து வருந்துவதில் பயனில்லை.

– சுக்கிரநீதி

நமது நோக்கு

நொண்டிச் சாட்டுகள்!

அரசுமீது எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வி கண்டிருக்கிறது. இது எதிர்பார்த்ததுதான்.

ஆனால், இப்பிரேரணையின் விவாதத்தின்போது பல நிலைப்பாடுகளைப் பொதுமக்கள் அறிய வாய்ப்பேற்பட்டுள்ளது.

பற்றைக்குள் கல்லெறிந்தால், முயல் வெளிப்படும் என்ற ரீதியிலான நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டிருக்கிறது.

வடக்கும் கிழக்கு புத்தத்தின் வேகம் போதாது, படையினருக்கு போதிய வசதிகள் அளிக்கப்படவில்லை எனப் பேசினார்கள் எதிர்க்கட்சித் தலைவர்கள் புதிய பரணியிற் பேசினார்கள்.

யுத்தத்தின் விளைவுகள் பற்றியும், கல்லி அதனால் அனுபவிக்கும் துன்பங்கள் பற்றியும், யுத்தம் ஒரு வியாபாரமாக மாறியுள்ளது பற்றியும் பேசியுள்ளார்கள்.

எதார்த்தநிலை புரிந்தது. மக்கள் படும் வேதனையறிந்தது. அரசிற்கு இடித்துரைக்க முற்பட்டது வரவேற்கத்தக்கதே!

இதேவேளை, அரசின் நிலைப்பாடு என்ன? அமைதித் தீர்வை முன்வைத்து, பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டிய அரசு, தேர்தல் காலமான படியால் இழுத்தடிக்கும் தந்திரோபாயத்தைக் கையாள்கிறது.

அதற்காக நொண்டிச் சாட்டுகளைக் கூறி வருவதும், கெட்டித்தனமாகப் பற்றைத் திருப்பி அடித்து விடுவது போலப் பேசி மகிழ்வதும் தெரிவதாகத் தெரிகிறது.

சமாதானம் பேச்சுக்குத் தயார் என்றால் பல தடைகளை தமிழ்த் போராளிகள் தரப்பில் அறிவித்தனர். அறிவுறுக்கள் வரவேற்பதை மூடி மறைத்து, புலிகள் பேச்சுக்குத் தயாரில்லை என்ற மாயையை உருவாக்க அரசு முயல்கிறது.

புலிகள் பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும் என்று கூறுவது அரசின் அறிவாகுமா? அல்லது உலகை ஏமாற்றும் தந்திரமா?

இரண்டிடை, எதிர்க்கட்சிகளிடமும் குழப்பம் தெரிகிறது. புலிகளுடன் பேசும் பட்சத்தில் ஏற்கனவே அரசியற் கைதிகள் அதனை வரவேற்க வேண்டும் என்று கூறுகின்றது.

பிரச்சினையைத் தீர்க்க மக்களின் வேதனையைப் போக்க வேண்டுமாயின், நொண்டிச்சாட்டுகளைத் தவிர்த்து நேர்மையான அரசியல் நடவடிக்கைகளை அரசு ஆரம்பிக்க வேண்டாமோ?

மரக்கறி. பழவகை கன்றுகள்

விவசாயிகளுக்கு விநியோகிக்க $1\frac{1}{2}$ லட்சம் ரூபா ஒதுக்கீடு

(மண்டைதீவு)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நல்ல இன மரக்கறி கன்றுகள் பழவகை கன்றுகள், தென்னம் கன்றுகள் ஆகியவற்றை உற்பத்தி செய்து பொதுமக்களுக்கும் விவசாயிகளுக்கும் விநியோகிக்கப்படவுள்ளது. இதற்கான இவ்வருட வரவு செலவுத் திட்டத்தில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

உடுவில் மேற்கு, நல்லூர் சேவை நிலையம், தொல்புரம் மேற்கு சேவை நிலையம் ஆகியவற்றின் மூலம் இந்த நற்றுணைகளை பேணும் திட்டம் செயற்படுத்தப்படவிருப்பதாக சண்டிலிப்பாய் பிரிவு திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு. வை. ரதிநாதன் தெரிவித்தார்.

இந்த பிரிவில் நல்ல இன ஆடுகளை இனப்பெருக்கம் செய்யு முகமாக நல்ல இன கிடாய் ஆடுகளை கொள்வனவு செய்வதற்காக 65 ஆயிரம் ரூபா இவ்வருட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

மேலே இவைகளுக் சேவை மன்றத்தின் மூலம் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

இப்பிரிவில் இவ்வருடத்தில் மரநாட்டு இயக்கத்தை செயற்படுத்த 54 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. -72

இன்று

(கொழும்புத்துறை)

சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தில் வருடாந்த மஹோற்சவம் இன்று 7ம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினைந்து நாள் விசேட அபிஷேகம், பூசை ஆராதனை வழிபாட்டுடன் திருவிழா நடைபெறும். -154

0 0 0

(யாழ்ப்பாணம்)

அரியாலை சனமூக நிலையப் பாலர் பாடசாலை சிறுவர்களின் கலைவாணிப் போட்டிகள் இன்று 07-ம் திகதி சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

0 0 0

(யாழ்ப்பாணம்)

ஜேர்மன் சமஷ்டி குடியரசு நிதியமைப்பின் ஆதரவில் புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் கல்லூரி லயன்ஸ் கழகம் நடாத்தும் இடம் பெயர்ந்தோருக்கான இலவச பயிற்சி நெறிக்கான விசேட ஆரவு இன்று 7ம் திகதி சனி காலை 9 மணிக்கு கல்லூரி லயன்ஸ் கழகத் தலைவர் க. ஞானதாசன் தலைமையில் இடம்பெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

டாக்டர் க. கிருஷ்ணபிள்ளை எழுதிய 'என் வாழ்வின் இரகசியம்' நூலை வெளியிட்டு நூல் வெளியீட்டு விழா இன்று சனி மாலை 4-00 மணிக்கு நாவலர் மண்டபம் எம். ஐ. ஏ. கட்டடத்தில் நடைபெறும்.

இவ்விழாவிற்கு வாழ். இந்து கிறிஸ்டோபர் தலைவர் து. வைத்திலிங்கம் தலைமை தாங்குவார். ஆய்வுரையை எழுத்தாளர் கே. ஆர். டேவிட், கவிஞர் நாவண்ணன் நிகழ்த்துவர்.

புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-05-07 சனி இரவு

8.01 அறிவிப்பு கலை
8-10 தாயகப் பாடல்கள்
8-25 நேயர் கடிதங்கள்
8-30 செய்திகள்
8-40 சித்திரம் "வீரம் விளையும் நிலம்"

1994-05-08 ஞாயிறு காலை

7-02 மாவீரர்களுக்கு
7-15 எதிரி கலைத்தல்
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள்
7-40 தொடர்ந்து எதிரி கலைத்தல்

இராகி மலன்

07 05 1994

சனிக்கிழமை

(தமிழுக்கு சித்திரை 24)

துவாதசி பி. ப 5 14 வரை உத்தராடம் பி. ப. 4 40 வரை சித்தயோகம் இரவு காலை காலை 8. 55 முதல் 10 25 வரை, சுபநேரம் பி ப. 2.55 முதல் 4 25 வரை ஆ. கிளி நாள் ஆரம்பம்.

மேடம்: பிறர் செடி பிடி, மனத்துயர், அலைச்சல்

இடபம்: இறை வழிபாடு, சுபநிகழ்ச்சி, பணவரவு

மிதுனம்: மகிழ்ச்சி, பொலிவு, கவலை, விரயம்

கடகம்: குடும்ப பிணக்கு, வருத்தம் வேறுபாடு, மனக்கவலை

சிங்கம்: தேர்ச்சி, மனத்திணறல், வேதனை

கன்னி: தொழில் நிமித்தம், காரியவெற்றி, உல்லாசம்

துலாம்: கடன் சுமை, எதேச்சை வெறுப்பு, விதண்டாவாதம்

விருச்சிகம்: முயற்சி தாமதம், பிறர் துன்பம், அரசு உணவு

தனுசு: ஜீவன பலம், விரோத நிதானம், மேலதிகாரி வன்மம்

மகரம்: மறைமுக உதவி, உடல் உபாதை, இலாபவருவாய்

கும்பம்: உறவில் சிக்கல், ஒதுக்கிப்போதல், கவலை

மீனம்: தொழில் சிறப்பு, வைத்திய செலவு, புதியதம்பு

ஜோஸியர்

யாழ். பொதுநூலகத்திற்கு மூன்று லட்சம் ரூபா நூல்கள் கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் மத்திய பொதுநூலகத்திற்கு மூன்று லட்சம் ரூபா பெறுமதியுள்ள பல தரப்பட்ட நூல்கள் கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நூல்கள் எப்பக்கமும் இன்று எடுத்துவருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மருத்துவத்துறை மாணவர்களுக்கு பயன்படக்கூடிய புத்தகங்களுடன் பல தமிழ்ப் புத்தகங்களும் இவற்றில் அடங்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. -162-154

இனகரன் ஆசிரியர் மீண்டும் விடுதலை

(சென்னை)

தினகரன் பத்திரிகையின் ஆசிரியர் திரு. முத்துப்பாண்டியன் நேற்று முன் தினம் சென்னையில் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டார்.

உண்மை மீறலுக்காக, சட்டப் பேரவை சபாநாயகர், பிறப்பித்த வாரண்டை எடுத்தே தினகரன் ஆசிரியர் கைதுசெய்யப்பட்டார்.

இவருக்கு முன்னர் விதிக்கப்பட்ட ஒருவார சாதாரண சிறைத்தண்டனையை சட்டப் பேரவைக்கட்டிடத்தாரம் வரவழைப்பெற்றதாகத்தெரிந்தே. -கி-

பிரான்ஸ் தமிழ் அகதிகள்

விருப்பத்தின் பேரிலேயே நாடு திரும்பினர்

(கொழும்பு)

"பிரான்ஸ் நாட்டிலிருந்து இலங்கை தமிழ் அகதிகள் எவரும் பலவந்தமாக திருப்பி அனுப்பப்படவில்லை;"

இவ்வாறு இலங்கைக்கான பிரான்ஸ் நாட்டுத்தூதுவர் ஜே. எஸ். வன்டேர்க்ஸ் கூறியுள்ளார்.

அவர் இதுவரைக்கு தெரிந்தவகையில், பிரான்ஸிலிருந்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகள் தற்போது இருக்கின்றார்கள். இவர்களில் ஒருகிலர் தாமாக விருப்பத்தின்பேரிலேயே இலங்கைக்கு வந்துள்ளார்கள்

ஆனால், இங்குள்ள பத்திரிகைகளில், அகதிகள் வலுக்கட்டாயமாக திருப்பி அனுப்பப்படுவதாக தவறான பிரசாரங்கள் மேற்கொண்டுவருகின்றது என்றும் கூறினார். -கி-

டெஸ்ட் கிரிக்கெட்

இல. வீரர் முரளீதரனுக்கு எட்டாவது இடம்

(லண்டன்)

இலங்கையின், இவர் சுழற்பந்து வீச்சாளரான முத்தையா முரளீதரன் உலகில் சிறந்த பந்து வீச்சாளர்களில் ஒருவராக கணிக்கப்படுகிறார்.

அண்மையில் லண்டனில் குறித்த வெளியிடப்பட்ட புள்ளி விபரம் ஒன்றில் உலகில் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பந்து வீச்சில், தற்போது முன்னணி வகிக்கும் பந்து வீச்சாளர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் முத்தையா முரளீதரன் 643 புள்ளிகளைப் பெற்று 8வது இடத்தை வகிக்கின்றார்; மேலும், இந்திய வீரர் அம்ரோஸ் 903 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தையும், இந்திய வீரர் அனில் கும்ளே 861 புள்ளிகளைப் பெற்று 4வது இடத்தையும் வகிக்கின்றனர்.

முத்தையா முரளீதரன், தனது மிக்குறுகிய கால டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 50 விக்கெட்டுகளை வீழ்த்தியதின் நிமித்தமே. இவர் தற்போது உலகில் சிறந்த பந்து வீச்சாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (வி-கி)

தாய்மண் மீட்க உறுதி எடு தமிழீழம் எங்கும் மரங்கள் நடு

போக்குவரத்து சபை ஊழியருக்கு சம்பளமில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். பருத்தித்துறை மன்னாருக்கு இடமாற்றம் பெற்ற கமர் 30 வடபிராந்திய போக்குவரத்துச்சபை ஊழியர்களுக்கு இதுவரையில் சம்பளம் வழங்கப்படவில்லை என புலனாய தெரிவிக்கப்படுகிறது.

மன்னாருக்கு வடமாகாண பொறுப்பேற்க சென்றார் மாத்திரமே சம்பளம் வரமுடியும் என வடபிராந்திய போக்குவரத்து நிர்வாகம் கூறியுகிறதாம்.

1990ம் ஆண்டு முதல் குறிப்பிட்ட 30 ஊழியர்களுக்கு மன்னாருக்கு இடமாற்ற உத்தரவு அனுப்பப்பட்டதாகவும் ஆனால் தற்போதுள்ள யுத்த நிலையில் மன்னாருக்கு செல்ல அச்சம் தெரிவித்து வருவதாகவும் குறியப்படுகிறது. -சி

மாட்டுவண்டிச் சவாரி போட்டி முடிவுகள்

(உடுவில்)

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு தமிழீழ பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவில் நடாத்தப்பட்ட மாட்டுவண்டிச் சவாரி போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம் வருமாறு.

'ஏ' பிரிவு. முதலாம் இடம் இராமநாதன் சிவானந்தன் (புன்னாலைக்கட்டுவன்) இரண்டாம் இடம் சின்னராசா கருணாகரன் (சண்டிலிப்பாய் வடக்கு) மூன்றாம் இடம் அந்தோனிப்பிள்ளை நவரட்ணராசா (உரும்பராய் வடக்கு)

'பி' பிரிவு முதலாம் இடம் செல்வத்துரை திருநாவுக்கரசு (சுட்டுவன் தெல்லிப்பழை) இரண்டாம் இடம் மாரிக்கண்டு துரைசிங்கம் (பிரான்பற்று பண்டத்தரிப்பு) மூன்றாம் இடம் கணபதிப்பிள்ளை கிருஷ்ணானந்தம் (அளவெட்டி வடக்கு, அராலி)

'சி' பிரிவு முதலாம் இடம் கந்தையா வரதராசா (வட்டுக்கோட்டை மேற்கு) இரண்டாம் இடம் கந்தையா செல்வரட்ணம் (கதிரை வடக்கு மானிப்பாய்) மூன்றாம் இடம் சிவகப்பிரமணியம் கிறீஸ்தன் (அராலி மேற்கு வல்லுக்கோட்டை)

(109-சி)

இலங்கை வங்கியின் கமத்தொழில் கடனுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பொருளாதார நடவடிக்கைகளை புனரமைப்புச் செய்வதற்கு கமத்தொழில் புனரமைப்புச் செயற்திட்டத்தின் கீழ் இலங்கை வங்கியினால் எதிர்வரும் 31-ம் திகதி தொடக்கம் கடன்கள் வழங்கப்படும் என்று இலங்கை வங்கி அறிவித்துள்ளது.

கடன் பெறுவதற்கு பாதிக்கப்பட்டவர் விண்ணப்பத்தை உறுதி செய்யவேண்டும். அத்துடன், முன்னர் கடன் பெற்றிருந்தால் அதை ஒழுங்காக மீளச் செலுத்தியிருக்க வேண்டும்.

ஒப்பேற்ற முடியுமான முயற்சி அபிவிருத்திக் திட்டத்தைக் காண்பிக்குமிடத்து ரூபா 10,000/- வரை கடன் வழங்கப்படும். செய்திட்டத்தில் பொருளியல் நிலை, அதிலிருந்து வரும் வருமானம், குடும்பத்தில் முழு வருமானம் கடன் பெறுபவரின் திருப்பிச் செலுத்தும் ஆற்றல் கடனை திருப்பிச் செலுத்தும் காலத்தைத் தீர்மானிக்கும். இக்கடன்களுக்கான வட்டி வீதம் ஆண்டுக்கு 9% ஆகும் என்றும் தெரிவிக்கப்பட்டது. -வி

சைவசித்தாந்த வகுப்பு

(யாழ்ப்பாணம்)

தென்னாட்டில் திவ்விய ஜீவன சங்கம் நடாத்தும் சைவசித்தாந்த வகுப்பு இன்று சாவகச்சேரி டிறிபேக் ஹோலில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. -வி

மஹாபொல புலமைப்பரிசில்

(யாழ்ப்பாணம்)

யாழ். மகாஜனக் கல்லூரி சபதிகலை அரங்கில் இன்று காலை 9 மணிக்கு 1992/1993ம் ஆண்டிற்கான மஹாபொல உயர்கல்வி புலமைப் பரிசில்களை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு கே.மாணிக்கவாசகர் வழங்கவுள்ளார்.

36 உயர்கல்வி மாணவர்கள் மஹாபொல புலமைப் பரிசில்களை இன்று பெறவுள்ளனர். - 16 -வி

இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் க. சத்திரசேகரா தலைமையில் நடைபெறும்.

சாவகச்சேரி பிரதேச செயலர் பண்டிதர் திருமதி பு. கணேசலிங்கம் இந்த வைபவத்தில் முதன்மை விருந்தினராகவும், தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. வி. விக்கலன் சிறப்பு விருந்தினராகவும், தென்னாட்டில் அரசியல் நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் திரு. ஏ. வினோ கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

ஈழ அகதிகளை திருப்பியனுப்பினால் போராட்டத்தில் குதிப்போம்

வை. கோ. எச்சரிக்கை

(சென்னை)

இலங்கைத்தமிழ் அகதிகளை கட்டாயப்படுத்தி இலங்கைக்கு மீண்டும் அனுப்புவதற்கு தமிழ்நாடு அரசு தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டால் தமது புதிய எதிர்கால அரசியலும் போராட்டத்தில் குதிக்கும் என்று திரு. வை. கோபாலசாமி தமிழ்நாடு அரசை எச்சரிக்கை செய்துள்ளார்.

வேதனைகளையும் பல்வேறு சோதனைகளையும் தாங்கி தமிழ்நாட்டில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளை கட்டாயப்படுத்தி இலங்கைக்கு அனுப்பக்கூடாது.

இலங்கையில் சுமுகமான நிலை ஏற்பட்டவுடன் அவர்கள் தாங்களாகவே இலங்கைக்கு திருப்பி விடுவார்கள். தமிழகம் இலங்கை அகதிகளை இலங்கை அரசு இலங்கைத்தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்பவே முயற்சி செய்கிறது. எனினும் தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்கு அனுப்புவதற்கு முற்படுகிறது. என்று திரு. வை. கோபாலசாமி கூறியுள்ளார். -வி

இலங்கையில் ஈழத்தமிழர்களுக்கு பாதுகாப்பில்லை!

(சென்னை)

"தமிழ்நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்கு கட்டாயமாக திருப்பி அனுப்பவேண்டாம்" என்று இலங்கை-இந்திய நட்புறவுச் சங்கம் தமிழக முதல்வர் முதல்வர்செல்வி ஜெயலலிதாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்ட அகதிகளுக்கு இன்னும் அதிக மறுவாழ்வு அளிக்கப்படவில்லை. அவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மிகவும் அவதியுடன் வாழ்ந்து வருகிறார்கள் என்றும் இலங்கையில் வடபகுதிகளில் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களும் நடைபெறுகின்றன என்றும் கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினரினதும், பொலிசாரினதும் கடத்தல்முறைகள் தங்கு தடையின்றி நடைபெறுகின்றன என்றும் மேற்படி சங்கம் தெரிவித்துள்ளது! -வி-

மாநகரஎல்லைக்குள் 46 வீதிகள் திருத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள 46 வீதிகள் திருத்தம் செய்யவிடும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கான நிதி ஒதுக்கீடுகள் வீதிகளுக்கான நடுத்தர முதலீட்டுத் திட்டத்தின் கீழ் வடக்கு—கிழக்கு மாகாண அரசிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்துடன் இணைந்த வேலைகளைச் செய்வதற்கான கொழும்பிலிருந்து 300 பணியாளர் எடுத்துவரப்படவுள்ளது. —162-வி

மண்டேலா அடுத்தவாரம் ஜனாதிபதியாக பதவியேற்பு

உலகத்தலைவர்கள் கலந்துகொள்வர்

(லண்டன்)

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி தலைவர் நெல்சன் மண்டேலா அடுத்த வாரம் தென் ஆபிரிக்காவின் புதிய ஜனாதிபதி பதவி ஏற்க இருப்பதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து தென் மண்டேலா தமது அமைச்சரவையை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இன்பிரவரி ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் வெற்றியின் அதிகாரபூர்வ தகவல் வரவுள்ளதாகவும் இருக்கும் டாபோபேக்கியை முதல் உப ஜனாதிபதியாகவும், தற்போதைய ஜனாதிபதி எப். டபிள்யூ. டி கிளார்க்கை 2-வது உபஜனாதிபதியாகவும் நியமிக்கவும் நெல்சன் மண்டேலா முடிவு செய்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி பதவி ஏற்புவைபவத்தில் அமெரிக்கா ஜனாதிபதி பில் கிளிண்டன் உட்பட பல முக்கிய உலகத்தலைவர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. வி-இ

மறுமலர்ச்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் நடைபெற்றது.

இலங்கையில் சுமுகமான நிலை ஏற்படும் வரை இலங்கை தமிழ் அகதிகளை அங்கு திருப்பி அனுப்பவேண்டாம் என்று தமிழ்நாடு அரசிடம் கோருவதென்ற தீர்மானமும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. - வி-வி

மட்டக்களப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

(7) ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர். இதேபோன்று கடந்த 30-ம் திகதி காஞ்சிபுரம்குடா குருந்தி வடிச்சேனை என்னுமிடத்தில் வைத்து இரு தமிழ் இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

திருமலை (வயது-21) மகிழ்நன் தயானந்தமூர்த்தி (வயது 22) அம்பாறை ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர். -வி

ஐ. தே. க.

1ம் பக்கத் தொடர்ச்சி)

இவர் தமது செயலாளர் பதவியை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்டார்.

அதன் பின் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் காமினி விஜேசேகர தெரிவித்ததாவது:-

ஐ. தே. கட்சியின் நிர்வாக மத்திய குழு திருத்தி அதிகாரம் மட்டம் வரை சகல பிரிவுகளிலும் புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவே எனது முக்கிய குறிக்கோளாகும்.

கட்சியிலிருந்து பிரிந்து சென்ற பிரிவினர் அனைவரும் ஒன்று திரட்டப்பட்டு கட்சியில் ஒற்றுமை ஏற்படுத்தப்படும்.

ஜனாதிபதி ஐக்கிய தேசிய முன்னணி மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயல்படுவதற்கு முயற்சி எடுக்கப்படும்.

திருமதி ஹேமா பிரேமதாசா திரு. சஜித் பிரேமதாசா ஆகியோர் அரசியலில் ஈடுபடுவதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தி கொடுக்கப்படும்.

இந்த இருவருடனும் பிரேமதாசாவின் குடும்பத்தினருடனும் இதுபற்றி பேச்சுவார்த்தை நடத்தி அவர்களை இருவரையும் ஐ. தே. கட்சியில் இணைந்து எதிர்வரும் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

எனினும் இது ஒரு இலகுவான காரியமாக இருக்காது. காரணம் சென்ற பிரேமதாசாவுக்கு எதிராக நம்பிக்கை வாக்கு பிரேரணை சமர்ப்பித்த திரு காமினி திஸாநாயகவை மீண்டும் ஐ. தே. கட்சியில் சேர்த்துக்கொள்ளக் கூடாது திருமதி ஹேமா பிரேமதாசா, திரு. சஜித் பிரேமதாசா ஆகியோர் கட்சியில் இணைவதற்கு நல்லதொரு சூழ்நிலை ஏற்படுவது கேள்விக்குறியே என ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. - இ

35 லட்சம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வும் அரசாங்கம் அறிவித்தது.

நாடுமுழுவதும் மொத்தம் 48 லட்சம் பாடசாலை மாணவர்களுக்கு 35 லட்சம் மாணவர்களுக்கு இலவச உணவு முத்திரை வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டது. —இ-வி

மறுமலர்ச்சியிலிருந்து

1ம் பக்கத் தொடர்ச்சி

நேற்று குருநாகலில் நடைபெற்ற பொதுசன ஐக்கிய முன்னணியின் பொதுக்கூட்டம் ஒன்றுக்கு அனுப்பி வைத்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது

தென்மாகாண சபைத் தேர்தலின்போது பொதுசன ஐக்கிய முன்னணி பொது மக்களின் பெரும் ஆதரவைப் பெற்று வெற்றி ஈட்டியது.

குருநாகலில் இடம்பெறும் இந்தப் பொதுக்கூட்டமானது வெற்றிக்கு ஒரு நல்ல ஆரம்பமாக இருக்கும் என்றார். இ-வி

மனித உரிமை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். அவர்களை பதவியிலிருந்தும் நீக்குதல் வேண்டும்.

காணாமற் போனோர் அல்லது இறந்தோருக்கு ஒரு வருடத்தின் பின் மரண அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்படவேண்டும்.

ஐ. நா. வின் செயற்பாடுகளை ஏற்றுக்கொண்டதற்கிணங்க சூழ்ச்சித்தடுப்பு சட்டம் கொண்டுவரப்பட்ட உடனடியாக செய்ய வெளிநாட்டு நிபுணர்களை வரவழைக்க வேண்டும்.

தமக்கு பலவீனமானதும் சம்பந்தமில்லையென நிரூபித்த பிறகாவது மீண்டும் மீண்டும் கைது செய்தலை நிறுத்தல் போன்றவற்றை நடைமுறைப்படுத்துமாறும் ஐரோப்பிய நாடாளுமன்றம் இலங்கை அரசை கேட்டுக்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. -வி-

ஜனாதிபதி மாளிகை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படாவிடிலும் தாம் தமது உரிமை மாற்றத்தொடர்பாக ஜனாதிபதிக்கு கடிதமூலம் அறிவித்துள்ளார்.

ஆனால் இந்தக் கடிதத்துக்கு ஜனாதிபதியிடமிருந்து திரு. கதிர்காமருக்கு பதில் எதுவும் கிடைக்கவில்லையென தெரிவிக்கப்பட்டது.

தொழிலாளர் தினமான மே முதலாம் திகதியன்று காலை திரு. கிஷோ ஜனாதிபதி மாளிகைக்கு முன்னால் உள்ள நடைபாதையில் சத்தியாக்கிரகம் இருந்தார்.

தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை போஸ்டரில் எழுதி தமது இருபக்கத்திலும் வைத்துக் கொண்டார். சுமார் பதினைந்து நிமிடங்கள் வரை சத்தியாக்கிரகம் மேற்கொள்ள அவருக்கு அனுமதி வழங்கப்பட்டதாம்.

இச்சமயத்தில் இவரைப் படம் பிடிக்க வந்த 'வந்த' பத்திரிகை புகைப்படம் பிடிப்பாளர் ஒருவருக்கு பாதுகாப்பு அதிகாரிகள் தடை விதித்தனர்.

இதன் பின்னர் இந்த படப்பிடிப்பாளர் கைது செய்யப்பட்டார். திரு. கிஷோரும் இவருடன் சேர்ந்து ஒரு ஜீப் வண்டியில் ஏற்றப்பட்டு கோட்டைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மே இரண்டாம் திகதி கோட்டை மாஜிஸ்ரேட் நீதிபதி படப்பிடிப்பாளருக்கு ஆயிரம் ரூபா அபராதமும் விதித்தார். -இ-வி

திருநெல்வேலி

ஸ்ரீ நீலாயதாக்ஷி சமேத காயாரோஹண சுவாமி தேவஸ்தானம்

இன்று சமய அறிவும் பரீட்சை

மேற்படி பரீட்சை

இன்று 07-05-94 சனிக்கிழமை

காலை 9 மணிக்கு

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெறும்.

என்பதனை சகல பரீட்சார்த்திகளுக்கும் அறியத்தருகின்றோம்.

தேவஸ்தானம்.

திருநெல்வேலி. (ஏ-4067)

இப்பத்திரிகை "எழுநாடு" லிமிடெட் அதாவது [illegible] யாழ்ப்பாணம் [illegible] மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அலுவலகத்தில் 1994ம் ஆண்டு மே மாதம் 7-ம் திகதி அச்சிடு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Fort Bombay under Licence Number B/16336/D